படுகிருர்கள். இடம் கிடைக்கவில்லை என்ற புகார் அங்கு மட்டுமல்ல, பஸ்களிலேயும், இரயில்களிலேயும்கூட இடம் கிடைக்கவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. ஆகவே, கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுத்தாக வேண்டுமென்பது வளர்ச்சி பெறுகின்ற சமுதாயத்திற்குத் தேவையான கொள்கை அல்ல. சென்னையில் இன்னொரு கல்லூரி ஆரம்பிக்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. அதற்குக் காரணம் சென்னையில் ஆரம்பித்தால் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பு உலகத்திற்குப் புலனுகும் வாய்ப்பிருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. அதற்கான சூழ்நிலை சென்னையில் இருப்பதால் மறுபடியும் இங்கே ஒரு கல்லூரி தொடங்கலாம் என்றல், அதற்குக் குறைந்தது சுமார் 25 இலட்சம் ரூபாய் தேவைப்படும். பழனி அறநிலையத்திலிருந்து 5 இலட்சம் ரூபாய் நன்கொடை கிடைத்தால் மேலும் நன்கொடைகளைத் திரட்டி இந்த முயற்சியைத் தொடங்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. ஆனல் 5 இலட்சம் ரூபாயை அவர்கள் சேர்த்துத் தர இயலாததால் நாம் இந்த ஆலோசனையை ஒத்திவைத்திருக்கிறோம்.

திருச்சிராப்பள்ளி மருத்துவ மனைக்கு நீர் வழங்கல்

*332 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசினர் பெரிய மருத்துவ மனையில் தேவைப்படும் தண்ணீர் விநியோக வசதி தற்போது இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சியிலுள்ள அரசினர் பெரிய மருத்துவமனையில் மழைக்காலத்திலும் கூட போதுமான தண்ணீர் விநியோகம் இல்லை என்பதை நானே தங்கிச் சிகிச்சை பெறும்போது நேரில் கண்டேன். இதைத் தீர்ப்பதற்குத் தனியே ஒரு 'ஓவர்ஹெட் டேங்க்' கட்டி அதன்மூலம்

1973 நவம்பர் 23]

நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டதே, அது பரிசீலனையில் இருக்கிறதா என்கிற விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நகரசபை மூலமாகத் தண்ணீர் வழங்கும் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஏற்கனவே சில நேரத்தில் குறைபாடு ஏற்பட்ட நேரத்தில் நகரசபைக்குத் தெரிவிக்கப்பட்டு போதுமான தண்ணீர் அண்மையில் கிடைத்திருக்கிறது என்ற பதில் தந்திருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் போய்ப் பார்த்த பொழுது தண்ணீர் கிடைக்காமல் இருந்து, மறுபடியும் கிடைக்கும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கலாம்.

தீவிர குடும்பக்கட்டுப்பாடு திட்டங்கள்

***333 வினா—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Intensive Family Planning ஜில்லா கலெக்டர் தலைமையில் இதுவரை எந்தெந்த மாவட்டங்களில் நடத்தப்பட்டிருக்கிறது?

(இ) அதுவன்றி, கிராமாந்திரங்களில் ஹெல்த் டிபார்ட்மெண்ட் மூலமாக ஒரு Family Planning திட்டம் நடத்தப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, குடும்பநல தீவிரத் திட்டத்திற்காக மத்திய அரசு 50 சதவிகிதம் மானியத்தைக் குறைத்துவிட்டதாகச் செய்தி வந்தது. அதற்குப் பிறகு ஒருசில நாட்களுக்கு முன்னால் மத்திய அரசின் அமைச்சர் ஒருவர் எல்லா மாநிலங்களும் தீவிரமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து ஏதாவது தகவல் மாநில அரசுக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மத்திய அரசுக்கு ஏற்பட்ட எதிர்பாராத நிதிநிலை நெருக்கடி காரணமாக குடும்பநலத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த

@ 138-139-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.